

# அலகு 3 நகராட்சி மற்றும் மாநகராட்சி






## கற்றல் நோக்கங்கள்



- ❖ நகராட்சி மற்றும் நகராட்சியின் பணிகளைப் பற்றி அறிந்து கொள்ளல்
- ❖ உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றி புரிந்து கொள்ளல்
- ❖ மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் பணிகள் பற்றி அறிந்து கொள்ளல்
- ❖ நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் வருவாய் ஆதாரங்கள் பற்றி அறிதல்



R8XD81




4th_Social Science_Unit 3_Municipalities and Corporation_EM.indd 147 1/28/2020 5:45:32 PM



கோடை விடுமுறையின்போது முகிலன் தன் மாமா வீட்டிற்குச் சென்றான். ஒரு நாள் அவன் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது நகராட்சிப் பணியாளர்கள், வீட்டிற்கான சொத்துவரி மற்றும் இதர வரிகள் பற்றி அறிவித்ததைக் கேட்டான். உடனே முகிலன் மாமாவிடம் ஓடி வந்தான்.






**மாமா**

ஏன் ஓடிவருகிறாய்? என்ன நடந்தது?



**முகிலன்**

மாமா! நகராட்சி என்றால் என்ன? நாம் ஏன் வரி கட்டவேண்டும்?



**மாமா**

முகிலா! நகராட்சி என்பது உள்ளாட்சியின் ஓர் அமைப்பு. இங்கு 50,000 முதல் 1,00,000 வரை மக்கள் வாழ்கின்றனர். இது பல வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நமது வீடு 10–ஆவது வார்டில் அமைந்துள்ளது. நமது நகராட்சியில் ஏறத்தாழ 30 வார்டுகள் உள்ளன. தமிழ்நாட்டில் 148 நகராட்சிகள் உள்ளன.



**முகிலன்**

நகராட்சியின் தலைவர் யார்?



நகராட்சிப் பணியாளர்கள்




நகராட்சி அலுவலகம்




மாமா

முகிலா!
நகராட்சியின் தலைவர் 'நகரத் தந்தை' என அழைக்கப்படுகிறார். நகராட்சி உறுப்பினர்களின் பணிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். நகராட்சியின் உறுப்பினர்களில் ஒருவர் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.



முகிலன்

மாமா! நகராட்சியின் பணிகள் யாவை?





மாமா

- தெருவிளக்கு அமைத்தல்.
- நூலகம் அமைத்துப் பராமரித்தல்.
- அங்காடியைப் (சந்தையை) பராமரித்தல்.
- குடிநீர் வசதிகளை வழங்குதல்.
- சாலைகள் அமைத்தல்.
- குப்பைகளை அகற்றுதல்.





முகிலன்

இப்பணிகளை மேற்கொள்ள நகராட்சிக்கு வருவாய் எப்படி கிடைக்கிறது?



மாமா

இத்தகைய பணிகளை நகராட்சி மேற்கொள்வதற்கு மத்திய, மாநில அரசுகள் நிதி வழங்குகின்றன. மேலும் மக்கள் செலுத்தும் வீட்டுவரி, தொழில் வரி, குடிநீர் வரி, கடை வரி, சாலைவரி மற்றும் கழிவுநீர் அகற்றல் வரி போன்ற வரிகளின் மூலமும் வருவாய் கிடைக்கிறது.




4th_Social Science_Unit 3_Municipalities and Corporation_EM.indd 149 1/28/2020 5:45:36 PM

## தெரிந்து கொள்ளலாமா?



உள்ளாட்சி அமைப்பின் தந்தை – ரிப்பன் பிரபு

மாமா



நகராட்சி தவிர கீழ்க்காண்பனவும் உள்ளாட்சி அமைப்பின் கீழ் வருகின்றன.

- டவுன்ஷிப் (நகரியம்) – (எ.கா.) நெய்வேலி
- கண்டோன்மென்ட் (இராணுவக் கட்டுப்பாட்டு வாரியங்கள்) (எ.கா.) பரங்கிமலை, குன்னூர்
- அறிவிக்கப்பட்ட பகுதிகள்.

7J8A57




**உள்ளாட்சியின் அமைப்பு**

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்
  1. மாநகராட்சி
  2. நகராட்சி
  3. பேரூராட்சி
- கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள்
  1. மாவட்ட ஊராட்சி
  2. ஊராட்சி ஒன்றியம்
  3. கிராம ஊராட்சி



மாமா



உதாரணமாக, நாம் சென்னை, திருச்சி, கோவை, மதுரை மற்றும் சேலம் போன்றவற்றை மாநகராட்சிகள் என அழைக்கிறோம்.

## தெரிந்து கொள்ளலாமா?

- 1957 ஆம் ஆண்டு 'பல்வந்த் ராய் மேத்தா குழு' அறிக்கையின்படி இந்தியாவில் மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1978 ஆம் ஆண்டு 'அசோக் மேத்தா குழு' அறிக்கையின்படி இந்தியாவில் இரண்டடுக்கு பஞ்சாயத்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது.




4th_Social Science_Unit 3_Municipalities and Corporation_EM.indd 150 1/28/2020 5:45:39 PM



முகிலன்

மாநகராட்சி என்றால் என்ன?




மாமா

தமிழக அரசு, மக்கள் தொகை மற்றும் வருவாய் அடிப்படையில் சில நகராட்சிகளைத் தரம் உயர்த்தும். அவை மாநகராட்சி என்று அழைக்கப்படும்.



முகிலன்

மாமா! தமிழ்நாட்டில் எத்தனை மாநகராட்சிகள் உள்ளன?



மாமா

தமிழ்நாட்டில் 15 மாநகராட்சிகள் உள்ளன. இதில் சென்னை மாநகராட்சி மிகவும் பழைமையானது.



மாநகராட்சியின் பணிகள்




சென்னை மாநகராட்சி அலுவலகம்
(ரிப்பன் மாளிகை)



முகிலன்

மாமா! மாநகராட்சியின் தலைவர் யார்?



**மாமா**

மாநகராட்சியின் தலைவர் 'மேயர்' எனப்படுகிறார். அவரை மாநகராட்சியின் தந்தை எனவும் அழைப்பர். மாநகராட்சி உறுப்பினர்களின் பணிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இந்திய நிருவாக அதிகாரிகள் மற்றும் இதற்கு இணையானவர்கள் அரசால் மாநகராட்சியில் பணியமர்த்தப்படுகிறார்கள். பல நகர்ப்புறங்கள் மாநகராட்சிகளைக் கொண்டுள்ளன.




## மாநகராட்சி


1. சென்னை
2. மதுரை
3. கோயம்புத்தூர்
4. திருச்சிராப்பள்ளி
5. சேலம்
6. திருநெல்வேலி
7. வேலூர்
8. தூத்துக்குடி
9. திருப்பூர்
10. ஈரோடு
11. தஞ்சாவூர்
12. திண்டுக்கல்
13. ஓசூர்
14. நாகர்கோவில்
15. ஆவடி



**முகிலன்**

மாநகராட்சியின் பணிகள் என்ன?






**மாமா**

- நகரச் சாலைகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.
- குடிநீர் வசதிகளை அமைத்தல்.
- குப்பைகளை அகற்றுதல்.
- நூலகங்களை அமைத்துப் பராமரித்தல்.
- பூங்காக்களை அமைத்துப் பராமரித்தல்.
- பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகளைப் பராமரித்தல்.



முகிலன்

மாநகராட்சிக்கு வருவாய் எவ்வாறு கிடைக்கிறது?




மாமா

மாநகராட்சிக்கு வருவாயானது தொழில் வரி, சொத்துவரி, பொழுதுபோக்கு வரி, சுங்கவரி, சாலை வரிகள் மூலம் கிடைக்கிறது.



முகிலன்

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தவிர வேறு என்ன அமைப்புகள் உள்ளன?



மாமா

மாநகராட்சி, நகராட்சிக்கு அடுத்து பேரூராட்சி என்ற ஒரு அமைப்பு உள்ளது. இவர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் ஆகும். நிருவாக அதிகாரிகளால் பேரூராட்சி நிருவகிக்கப்படுகிறது. பேரூராட்சி என்பது 5,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டதாகும்.



முகிலன்

மாமா! உங்களால் நகராட்சி மற்றும் மாநகராட்சி நிருவாகங்களைப் பற்றி தெரிந்துக் கொண்டேன்.

நன்றி மாமா !




4th_Social Science_Unit 3_Municipalities and Corporation_EM.indd 153 1/28/2020 5:45:43 PM

மாமா

நன்று!

கை கழுவி விட்டு வா, மதிய உணவை நாம் சாப்பிடலாம்.






1. உனது வார்டில் உள்ள பூங்கா மற்றும் நூலகங்களில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளைப் பற்றி உனது வகுப்பில் கலந்துரையாடு.
2. உனக்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு, உனது ஆசிரியருடன் சென்று அங்கு நடக்கும் சபைக் கூட்டத்தைக் கவனி.
3. உனது பெற்றோர் என்னென்ன வரிகளைச் செலுத்துகின்றனர்?

**சொற்களஞ்சியம்**

| | | | |
|---|---|---|---|
| அரசாங்கம் | - | ஒரு நாடு நிர்வகிக்கும் அரசியல் அமைப்பு. | Government |
| வரி | - | அரசாங்கத்திற்கு செலுத்தும் மக்களின் வருமானம் அல்லது இலாபத்தின் ஒரு பகுதி. | Tax |
| வருமானம் | - | வழங்கப்பட்ட சேவைக்கான கட்டணம். | Revenue |
| மக்கள் தொகை | - | ஒரு பகுதியில் வாழும் அனைத்து மக்களின் எண்ணிக்கை. | Population |
| நிருவாகம் | - | ஒரு அமைப்பின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்த தேவையான ஏற்பாடு மற்றும் பணிகள். | Administration |
| தொழில்முறை வரி | - | ஒரு தனிநபரின் வருமானத்தின் மீது மாநில அரசு விதிக்கும் வரி. | Professional tax |



4th_Social Science_Unit 3_Municipalities and Corporation_EM.indd 154 1/28/2020 5:45:47 PM

G262LS

# மதிப்பீடு

## அ .கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தமிழ்நாட்டின் மிகப்பழைமையான மாநகராட்சி______________ ஆகும்.
2. உள்ளாட்சியின் தந்தை என்று அழைக்கப்படுபவர்______________.
3. ______________ ஆம் ஆண்டு பல்வந்த்ரா ராய் மேத்தா குழு அறிக்கையின்படி இந்தியாவில் மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
4. நகராட்சியின் பணிக்காலம்______________ ஆண்டுகள் ஆகும்.

## ஆ. பொருத்துக.

1. கிராமப்புற உள்ளாட்சி – 5,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை
2. ரிப்பன் கட்டிடம் – நகரியம்
3. நெய்வேலி – கிராம ஊராட்சி
4. பேரூராட்சி – மாநகராட்சி
5. மேயர் – ரிப்பன் பிரபு

## இ. காலி இடங்களை நிரப்புக.

| வ.எண். | | நகராட்சி | மாநகராட்சி |
|---|---|---|---|
| 1 | தலைவர் | நகரத் தந்தை | |
| 2 | எண்ணிக்கை | | 15 |
| 3 | பணிக்காலம் | | |
| 4 | அதிகாரி | ஆணையர் | |
| 5 | வருவாய் | | தொழில் வரி |

## ஈ. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. மாநகராட்சியின் பணிகள் யாவை?
2. உள்ளாட்சியின் அமைப்பு பற்றி குறிப்பு வரைக.
3. நகராட்சியின் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
4. தமிழ்நாட்டில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை யாது?
5. நகராட்சியின் வருவாய் ஆதாரங்கள் யாவை?



4th_Social Science_Unit 3_Municipalities and Corporation_EM.indd 155 1/28/2020 5:45:48 PM

## வகுப்பு IV – கணக்கு, அறிவியல், சமூக அறிவியல் (பருவம் I, தொகுதி 2)
## மேலாய்வாளர்கள், நூலாசிரியர்கள் பெயர் பட்டியல்

### கல்வி ஆலோசகர்

**முனைவர் பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடதிட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

### பாடநூல் ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர் கே. எஸ். மொழியரசி**
முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி
மற்றும் பயிற்சி நிறுவனம்.
கீழப்பலூர், அரியலூர் மாவட்டம்.

### பாட ஒருங்கிணைப்பாளர்

#### கணிதம்

**கே. ரேவதி**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.
பெரம்பலூர்.

**பி. மலர்விழி**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
பாடியநல்லூர், திருவள்ளூர்.

#### அறிவியல்

**தெ. அசோக்**
முதுநிலை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
பொன்னேரி, திருவள்ளூர்.

#### சமூக அறிவியல்

**ச. விஜயலட்சுமி**
பட்டதாரி ஆசிரியை,
அ. மே. நி. பள்ளி,
கூவத்தூர், காஞ்சிபுரம்.

### கலை மற்றும் புத்தக வடிவமைப்புக் குழு

ஜாண்ஸ்மித்,
அ. அடிசன் ராஜ்,
மனோகர் ராதாகிருஷ்ணன்
யோகேஷ்,
சந்தியாவு ஸ்டீபன்,
பிரசாந்த்,
பக்கிரிசாமி

### தரக்கட்டுப்பாடு

ராஜேஷ் தங்கப்பன்
ஜெரால்டு வில்சன்

### அட்டைப்பட வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

### ஒருங்கிணைப்பாளர்

ரமேஷ் முனிசாமி

## கணிதம்

### மேலாய்வாளர்கள்

**முனைவர் இராமானுஜம்**
பேராசிரியர், கணித அறிவியல்
நிறுவனம், தரமணி, சென்னை.

**ஆர். கிருத்திகா**
ஆராய்ச்சி நிறுவனம்
அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம்,
பெங்களூரு.

### பாட நூலாசிரியர்கள்

**பி. கல்பனா**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஆலம்பாக்கம், புல்லம்பாடி
ஒன்றியம், திருச்சி.

**எஸ். ரவி**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
அழகிய மணவாள
மண்ணச்சநல்லூர், திருச்சி.

**எம். சங்கர் கணேஷ்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஆனூர், விழுப்புரம்.

**ஜ. மஹாலக்ஷ்மி**
தலைமை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,
செம்பியாக்குடி, அரியலூர்

## அறிவியல்

### மேலாய்வாளர்கள்

**ஏஞ்சலின் ரூபி**
உதவி பேராசிரியை,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

**முனைவர் க. சிந்தனையாளன்**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்
நிலைப் பள்ளி, பெரியார் நகர்,
நந்தம்பாக்கம், காஞ்சிபுரம்.

### பாட நூலாசிரியர்கள்

**ஜே. பார்த்திபன்**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர்.

**ஸ்ரீவத்சன் ராமசாமி**
மதி பௌண்டேஷன்,
சென்னை.

**ந. கோபி**
வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர்,
நெமிலி ஒன்றியம், வேலூர்.

**பி. வசந்தகுமார்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
ஒத்தைபுளிகுடியிருப்பு,
புதுக்கோட்டை.

**என். அகிலா**
பட்டதாரி ஆசிரியர்,
அ.உ.நி.பள்ளி, அடிகுடிக்காடு,
அரியலூர்.

**எஸ். இந்திரா**
பட்டதாரி ஆசிரியர்,
அ.உ.நி.பள்ளி, முனியன் குறிச்சி,
அரியலூர்.

**கே. ஆனந்தன்**
பட்டதாரி ஆசிரியர்,
அ.உ.நி.பள்ளி, சோழமாதேவி,
அரியலூர்.

**வி. காமாட்சி**
தலைமை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி,
கண்டமங்கலம், விழுப்புரம்

**கே. செல்வமணிகண்டன்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி,
கருக்கை, கடலூர்.

**எம். மரியநேசன்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி,
தென்னவராயன்பட்டு,

## சமூக அறிவியல்

### மேலாய்வாளர்கள்

**சு. கோமதி மாணிக்கம்,**
பட்டதாரி ஆசிரியை,
அ. மே. நி. பள்ளி,
பழைய பெருங்களத்தூர்,
காஞ்சிபுரம்.

**க வேலு,** பட்டதாரி ஆசிரியர்,
அ. ம. மே. நி. பள்ளி, தலைவாசல்,
சேலம் மாவட்டம்.

**ஸ்ரீவத்சன் ராமசாமி**
மதி பௌண்டேஷன்
சென்னை.

### பாட நூலாசிரியர்கள்

**ஏ. சின்னப்பன்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர் நிலைப் பள்ளி,
பீல்வாடி, பெரம்பலூர்.

**எம். வரதன்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர் நிலைப் பள்ளி,
நன்னை, பெரம்பலூர்.

**கே. செல்வகுமார்**
வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர்,
செந்துரை, அரியலூர்.

**எஸ். அபிராமி**
இடைநிலை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
டி–பாலூர், அரியலூர்.

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

**இரா. ஜெகநாதன்,**
இடைநிலைஆசிரியர்,
ஊ.ஒ.ந.பள்ளி, போளூர்,
திருவண்ணாமலை.

**வ. பத்மாவதி,** பட்டதாரிஆசிரியர்,
அ.உ.பள்ளி, திருமானூர்,
அரியலூர்.

**ரூ. ஆல்பர்ட் வளவன் பாபு,**
பட்டதாரிஆசிரியர்
அ.உ.பள்ளி, பரமக்குடி,
இராமநாதபுரம்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப் லித் தோ தாளில்
அச்சிடப்பட்டுள்ளது.
வெப் ஆப்செ ட் முறையில் அச்சிட் டோர்:



4th_Social Science_Unit 3_Municipalities and Corporation_EM.indd 156 1/28/2020 5:45:48 PM